B1
019

# ஒளியை நோக்கி

## கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம்

### விருதளிப்பு - பண்பாட்டுக் கலைவிழா



## ஒன்பதாம் ஆண்டு
## சிறப்பு மலர் 2016

**EVENT DECLARATION & AWARD PRESENTATION BY:**

Honourable John McKay M.P (Parliament Secretary)
Honourable Mitzie Hunter (MPP)

## CANADIAN TAMIL WOMEN ASSOCIATION
## AWARD GIVING - CULTURAL SHOW 2016

Sunday October 2nd 2016 From 3:00 pm to 7:00 pm
at Periya Sivan Temple, 1148 Bellamy Road, Scarborough

# DR. PAUL HEALTHY LIFE CLINIC

## (Homeopathy and Acupuncture)

## Dr.போல் ஜோசேப்

BHMS (Ind.), HD (can.) RAP (can.)



### ஹோமியோபதி (ஜெர்மன் மருத்துவமுறை)
### அக்குபங்சர் (சீன மருத்துவமுறை)

B.H.M.S (Bachelor of Homeopathy Medicine and Surgery)
Qualified from Tamilnadu Dr. M.G.R. Medical University, Madras, india.
Doctor of Homeopathy, Doctor of Acupuncture

முன்னாள் பேராசிரியர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்
மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மருத்துவ கல்லூரிகள்.

முன்னாள் விரிவுரையாளர், விநாயகா மிஷன்ஸ்
பல்கலைக் கழகம் சேலம், இந்தியா.

மருத்துவ ஆலோசகர், சண்முகா மருத்துவ
ஆராய்ச்சி நிறுவனம், சேலம்.

இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் தேர்வாளராகவும்,
சிறப்பு வருகை விரிவுரையாளராகவும் பணிபுரிந்தவர்.

இலங்கையின் முதல் B.H.M.S
மருத்துவ பட்டம் பெற்ற மருத்துவர்.

கனடா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில்
பதிவு பெற்ற மருத்துவ நிபுணர்.

ஹோமியோபதி, அக்குபங்சர், அக்குபிரஷர், நாடிப் பரிசோதனை
தியானம், யோகா மற்றும் உளவியல் ஆலோசகர்.

பக்க விளைவுகளில்லாத, பத்தியமேதுமில்லாத, அனைத்து
நோய்களிலிருந்தும் சுகமடைந்து ஆரோக்கிய வாழ்வு பெறலாம்.

**ஒளியை நோக்கி
கனேடிய தமிழ்
மகளிர் மாமன்றம்
நடாத்தும்
விருதளிப்பு, கலைவிழா
சிறப்புற நடைபெற
வாழ்த்துக்கள்!**

ஆலோசனைக் கட்டணம் இல்லை.
பெரும்பாலான வேலைக்காப்புறுதிகள் ஏற்றுக் கொள்ளப்படும்

**Tel : 416 438 3939 Cell : 416 9864903 drjp63@yahoo.com**

**1193 A, Brimley Rd., (Brimley & Brimorton) Scarborough M1P 3G5**

# இலக்கிய மாமணி
# சரஸ்வதி அரிகிருஷ்ணன்



அன்னை மடியில்
13.03.1940

இறைவன் அடியில்
02.10.2008

## துணையே துணை வருவீர்!

செந்தமிழில் சொல் எடுத்து
செம்மையாய் கதை வடித்தீர்.
செம் மொழியில் மேடையில் பேசி
செந் தமிழர் மனங் கொண்டீர்
செவ்வனே நற் காரியங்களாற்றி
தொண்டனென பேரடைத்தீர்
செந்தமிழ் எழுதியே கைகள்
களைத்து ஓய்ந்ததுபோ?

குற்றுயிராய் கிடந்து எழுந்தேன்
குறைவின்றி நிகழ்வ டைே காண அருள்வீர்
முற்றாய் குணம் பெற்று
உற்ற பெருமக்கள் பெருமைப்பட
சற்றும் குறைவின்றி அன்று போல்
இன்றும் செயல் படவே
ஊற’றாய் நீர் இருந்தால்
நாற்றாய்நொன் உயர்வேன் !

**என் நினைவில் வாழும்**
**துணையே துணை வருவீர்**
**அன்பு மனைவி – சரஸ்வதி அரிகிருஷ்ணன்**

# எனது உரை



என்னைத் தேற்றி பணி செய்வித்த எல்லாம் வல்ல இறைவி மீனாட்சியின் அருளை வணங்கி, எனதுரையைத் தொடங்குகின்றேன்.

ஒன்பதாண்டு காலமாக கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் தன் சேவையைச் செவ்வனே செய்து வருகிறது. சீருடையில் மன்றத்தைப் பிரதிபலிக்கும் மகளிர் சேவை அளப்பரியது. வெளியில் இருந்து மன்றத்தின் சேவையைக் கண்காணித்து விட்டு, எங்களுக்குப் பல வழிகளில் உதவி புரிந்தவர்களை நாம் மறப்பதற்கில்லை. நான் நோயுற்று மருத்துவ மனையில் இருந்த போது இவ்வாண்டு "ஒளியை நோக்கி" நிகழ்வு நடைறொது என்றே எண்ணினேன். அவ்வேளையில் எனக்கு "நாங்கள் இருக்கிறோம். கவலையை விடுங்கள்" என்று ஆதரவளித்த அன்பு உள்ளங்களை மறப்பதற்கில்லை. இலை மறை காயாக இருந்து கொண்டு. இதுகாலும் மன்றத்திற்கு உதவி செய்த பல பெண்களைச் சிறப்பிக்க மன்றம் உத்தேசித்துள்ளது. எதையும் சிறிய உதவி என்று ஒதுக்கிவிட முடியாது. காலத்தில் செய்யப்படும் உதவி மானங் காக்கும் உடையாகும்.

நாடு கடந்தும் கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் தன்சேவையை விரிவு படுத்தியுள்ளது. தமிழகத்தில் "மடுவின் மனத்தில் இமயம்" என்ற நூலை வெளியிட்டு சிறப்புப் பெற்றது. "கடலூர் தாமரைக்குளத்தில்" உள்ள முதியோர் மையத்தில் ஒருநாள் முழுவதும் நிகழ்வுகளை நடத்தி, முதியோர் அன்பை அள்ளிக் கொண்டது. மேலும் பொதுத் தேர்தல், இடைத்தேர்தல், காலங்களில் 'லிபரல்' கட்சிக்காக தனது சேவையாளர்களை அனுப்பி, தேர்தல் பரப்புரையில் ஈடுபடுத்தியது. லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய ஒன்றுகூடலில் மன்ற அங்கத்தினர்கள் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் நடன நிகழ்ச்சிகளையும் படைத்து நற்சான்றிதழ்கள் பெற்றுள்ளனர்.

பெண்கள் என்றென்றும் தனித்துவம் பெற்றவர்கள் என்பதை கனேடிய தமிழ் மகளிர் மன்றம் அவ்வப்பொழுது நிரூபித்து வருகிறது. சக்தியின் மறு உருவான தமிழ்ப் பெண்கள் செயற்கரிய செயல் செய்யும் தகுதி பெற்றவர்கள் என்பதை மறுக்க முடியாது. தெய்வத் துணையே துடிப்புடன் செயல்பட வைக்கிறது.

கனேடிய தமிழ் மகளிர் மாமன்ற அமைப்பாளர்
சரஸ்வதி அரிகிருஷ்ணன்

HOUSE OF COMMONS
CHAMBRE DES COMMUNES
CANADA

*Hon. John McKay P.C.*
Member of Parliament
Scarborough—Guildwood



Saturday, October 2nd, 2016

Dear Friends and Neighbours;

As the Member of Parliament for Scarborough-Guildwood I extend my best wishes to everyone at the Canadian Tamil Women's Association Awards and Cultural Show.

I would also like to take this opportunity to thank all of the volunteers, staff and families of the Canadian Tamil Women's Association. Canada's diverse cultural life depends on people like you.

Sincerely,

Hon. John McKay P.C., M.P.
Scarborough-Guildwood

*Ottawa Office*
Room 549D, Centre Block, Ottawa, Ontario K1A 0A6
Tel.: 613-992-1447 Fax.: 613-992-8968
john.mckay@parl.gc.ca

*Constituency Office*
3785 Kingston Road, Unit 10, Scarborough, Ontario, M1J 3H
Tel.: 416-283-1226 Fax: 416-283-7935
jmckay@johnmckaymp.on.ca

# மதுவின் மனத்தில் இமயம் நூல்வெளியீட்டு விழா - தமிழகம்-23.4.2016



















# Mitzie Hunter, MPP
Scarborough-Guildwood



*On behalf of*
*the Government of Ontario*
*I would like to recognize the contribution of*

## ***Saraswathy Perumal (Sara)***

*and*

## ***The Canadian Tamil Women's Association***

Thank you for your generous work and dedication to improving the lives of Scarborough residents over the past nine years. Your commitment to empowering women is truly inspirational. Through Tamil music, dance, and drama, you have enriched our community. I wish you all the best and many more years of success to come.

Warm regards,

**Mitzie Hunter, MPP**
Scarborough-Guildwood

**Constituency Office** 4117 Lawrence Avenue East, Unit 109, Toronto, ON M1E 2S2
Tel 416-281-2787 | Fax 416-281-2360 | Email mhunter.mpp.co@liberal.ola.org | Twitter @MitzieHunter
www.mitziehunter.onmpp.ca

# பெருமக்களுடன் நேர் காணல்



திரு. சிவாஜி கணேசன் அவர்களின்
குடும்ப மருத்துவர்
டாக்டர். ராதாகிருஷ்ணன்
அவர்களுடன்
திருமதி சரஸ்வதி அரிகிருஷ்ணன்



செவாலியர்
டாக்டர். வி.ஜி.பி. சந்தோசம்
அவர்களுடன்



கலைமாமணி
டாக்டர். வாசன்
அவர்களுடன்



கலைமாமணி
மூதறிஞர் ஔவை நடராசன்
அவர்களுடன்

# தமிழவேள் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களின் வாழ்த்துச் செய்தி



கனடியத் தமிழ் மகளிர் மாமன்றத்தின் ஒன்பதாவது ஆண்டுவிழா வழக்கம் போல வெகு சிறப்பாக நடைபெறும் என்பது எனது நம்பிக்கை. அத்தைய நம்பிக்கையை ஏற்படுத்தியவர் வேறுயாருமல்ல, மன்றத்தின் தலைவர் திருமதி சரஸ்வதி அரிகிருஷ்ணன் அவர்கள்தாம்.

யானைக்குப் பலம் அதன் தும்பிக்கை. சரஸ்வதி அவர்களுக்குப் பலம் நம்பிக்கை. துணிவும் துணிந்தபின் எண்ணித் தயங்காத நம்பிக்கையும் இவரது வெற்றியின் இரகசியம்.

சரஸ்வதி அவர்கள் ஓர் அரிய பிறப்பு. அரிய செயல்களைச் செய்பவர் ஒரு சமூகத்தின் பெரியவர்கள் ஆகின்றர்கள்.

மகளிர் உரிமைகளையும் பெருமைகளையும் நலன்களையும் பேணுவதற்கென்றே தனிமன்றம் அமைத்த பெருமாட்டி இவர். மன்றத்தின் பெயர்தான் கனடியத் தமிழ் மகளிர் மாமன்றம். இதன் 9ஆவது ஆண்டுவிழா இவ்வாண்டு அக்டோபர் 2ஆம் நாள் பெரியசிவன் ஆலயக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவுக்கு **ஒளியைநோக்கி** என்று மகுடம் சூட்டப்பெற்றிருக்கின்றது. வழக்கமான மகுடந்தான். என்றாலும் புதுமையான நிகழ்ச்சிகள் இவ்வாண்டு நடைபெற இருப்பதாக அறிகின்றேன்.

அரசியற் பிரமுகர்களின் ஆதரவும் ஆசியும் இவ்விழாவுக்கு இருப்பதால் கெடுபிடிகள் அதிகமாக இருக்கும். நான் எல்லா விழாக்களிலுமே பங்குபற்றிவருகின்றவன் என்ற வகையில் இந்த விழாவின் சிறப்புகளை நன்கு அறிவேன்.

சிறப்புகளில் கலைநிகழ்ச்சிகள், விருதளிப்பு, சொற்பொழிவுகள், மலர் வெளியீடு என்பன சில. நடிகர்திலகம் சிவாஜி கணேசன் அவர்களைப்பற்றிய நூல்வெளியிடும் இடம் பெறுகின்றது. இது திருமதி சரஸ்வதி அரிகிருஷ்ணன் அவர்களின் ஒரு சாதனையாகவே வருங்காலத்திற் போற்றப்பட உள்ளது என்பது எனது தீர்க்கதரிசனம்.

இந்த விழாவுக்குத் தமிழ்மக்கள் ஆதரவு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். விழாச் சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றேன்.

# ஒளியை நோக்கி ஒன்பதில்!



தமிழ் மகளிர் யாபேரும் புலம் பெயர் நாட்டில்
தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற ஒரே
கொள்கைதனை தனித்துவமாகக்
கொண்டதே தமிழ் மகளிர் மாமன்றம்.

எதிர் நீச்சல் அடித்து எதிலும் மகளிர் முன்னேற்றம் பெற
எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எதுவாயினும்
அவைதனை எடுத்து வந்து நல்வழிகாட்டிட
ஆனவரே ஸ்தாபகர் திருமதி. அரி கிருஷ்ணன்.

தன் கணவன் காட்டிய பாதையில் தவறாது தலைவி தானும்
தலைமை தாங்கி முன்வந்து கால்பதித்து
காலத்தால் அழியாத தமிழ் பாரம்பரியத்தை
கனடாவிலும் கட்டிக் காக்கின்றார்.

கள்ளமிலாப் புன்னகையால் பெண் இனத்தைக் கவர்ந்து
கண்ணெனவே மாமன்றத்தைக் கட்டிக் காத்து வந்து
பெண் இனத்தின் பெருமைதனை பார் அறியச் செய்யும்
பெண் மனியே சரசுவதியே நீ வாழ்க.

காலாகாலம் கனடாவுக்குள் பிற கலைஞர்களை வரவேற்றும்
கனடாவாழ் கலைஞர்களை மலேசியாவுக்கு அழைத்தும்
திருமணத் தம்பதியரை சாதனையாளர்களைக் கௌரவித்தும் வரும்
தமிழ் மகளிர் மாமன்றத் தலைவியே நீவாழ்க!

ஒளி கொண்டு இருள் அகற்ற விரைந்து செல்லும் மன்றம்
ஒன்பதாம் ஆண்டில் கால்பதியும் இந்நாளில்
விழா எடுத்துக் கொண்டாட மகளிரே
விரைந்தெழுந்து திரண்டு வாரீர்!

*- கவிநாதம் திரு.சதாசிவம் பரந்தாமன்*

★★★★★

# கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் 2016ஆம் ஆண்டு நடத்திய சிறப்பு நிகழ்வுகள்

கடந்த ஆண்டு பங்குனித் திங்களில் கடலூரில் உள்ள தாமரைக்குளம் என்ற ஊரில் அமைந்துள்ள முதியோர் குடியிருப்பு வளாகத்திற்கு ஒரு குழுவாகச் சென்றோம்.

சுமார் 89 முதியோர்கள் சுகமாக, வேளைக்கு உணவு, மருத்துவ வசதி, சிறப்பான கவனிப்புடன் வாழ்ந்து வருகிறார்கள். இந்த முதியோர் குடியிருப்புப் பகுதியை நிர்வகித்து வருபவர்கள் திரு.பாபு, திரு.ராமலிங்கம் போன்ற இளைஞர்கள் தாம். வாழ்வின் முதுமையை அடைந்து விட்டால் எதுவுமே தெரியாது என்று எண்ணும் பலர் மத்தியில் இந்த இளைஞர்கள் மிகவும் அக்கறையுடன் முதியவர்களைப் பராமரித்து வருவது மிகவும் வரவேற்கத்தக்கது.

முதியவர்களில் உடல்நலத்தோடு இருப்பவர்கள் உழைக்கிறார்கள். மாடுகளைப் பராமரிப்பது, பால் கறந்து விற்பனைக்கு அனுப்புவது, தோட்ட வேலைகள் செய்வது போன்ற வேலைகளை செவ்வனே செய்து வருகிறார்கள். அங்குள்ள முதியோர்களுக்கான சமையல் காய் கறிகள் அவர்கள் வாழும் இடத்திலுள்ள தோட்டத்திலேயே புத்தம் புதிதாக கிடைக்கிறது.

இங்கு சமையலுக்கும் இம்முதியவர்களே உதவி செய்து கொடுக்கிறார்கள். காய்கறிகளை நறுக்கிக் கொடுப்பது போன்ற சிறுசிறு உதவிகளைச் செய்வதும் இங்குள்ள பெண்கள் தான்.

சின்னஞ்சிறு கல்வீடுகள், நான்கு பேர் தங்கக் கூடிய வசதியுடன் இருக்கிறது. குளியலறை, மலசல கழிப்பிட அறைகள் கூட சிரமமின்றி கட்டி வைத்திருக்கிறார்கள். ஒரு சில வீடுகளுக்கு முன்பு அழகான பூந்தோட்டங்களையும் காண முடிகிறது. ஒரு அம்மா சின்னஞ் சிறிய கிளிகளை வளர்த்து வருகிறார். அதற்கு தேவையான திணைக்கதிரை வீட்டுக்கு முன்பாக தானே வளர்த்து வருகிறார். அந்தக் கிளிகளுக்கு அந்தத் திணையைப் பரிமாறிக் கொண்டு ``சிட்டுக் குருவி, சிட்டுக்குருவி சேதி தெரியுமா? என்னை விட்டுப் பிரிந்து போன கணவன் வீடு திருப்பல`` என்று பாடுவதைக் கேட்டு நாமும் சோகத்தில் ஆழ்ந்து விடுகிறோம்.

பிற்பகல் 12:45 க்கு தாமரைக் குளம் சென்றடைந்தோம். அன்றைய பகல் உணவு கனேடியத் தமிழ் மகளிர் மாமன்ற ஏற்பாட்டில் நடந்தது. என்னோடு வந்திருந்த திரு. அருணகிரி, அவர் மனைவி திருமதி. விஜயகுமாரி, அவரின் தாயார் பிச்சையம்மாள், வாகனமோட்டி அனைவரும் சேர்ந்து முதியவர்களுக்கு பகல் உணவு பரிமாறினோம். ஒவ்வொருவர் முகத்திலும் மகிழ்ச்சியின் வெளிப்பாடு கண்டு நாங்களும் மகிழ்வுற்றோம்.

திரு. ராமலிங்கம், டாக்டர் பாபு மற்றும் அங்குள்ள நிர்வாகிகள் எங்களை கவனிப்பதிலேயே தீவிரம் காட்டினர். உணவு முடித்து தாமரைக்குளத்தைச் சுற்றிப் பார்த்தோம். மொட்டுக்களும், மலர்ந்ததுமான தாமரைப் பூக்கள் மனதிற்கு இதமாக காட்சியளித்தன. சுற்றிலும் வேப்பமரம், முருங்கை மரங்கள், கொன்றை மரங்களின் ரம்மியமான காற்று உள்ளத்தை மயிலிறகால் வருடுவது போலிருந்தது.

உணவு மண்டபத்தை விட்டு எல்லோரும் அருகில் உள்ள ஒன்றுகூடும் மண்டபத்தை அடைந்தோம். 25 ஆண்களும், 64 பெண்களுக்குமான புடவை, வேட்டி வழங்குதல்-என் நீண்ட நாளைய கனவு நிறைவேறிய எண்ணம் மேலோங்கி நின்றது. மீண்டும் மீண்டும் அங்கு செல்ல வேண்டும், முதியோர்களுடன் உறவாட வேண்டும் என்று என் உள்ளத்தில் உறுதி எடுத்துக் கொண்டேன். மாலை 7:30 மணிவரை அவர்களுடன் உரையாடி நேர்காணல் கண்டு மகிழ்ந்திருந்தமையால் திருவண்ணா மலைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணமும் மறந்து விட்டது. திருவண்ணாமலையை தாமரைக் குளத்திலேயே கண்டு விட்ட மகிழ்ச்சியில் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு மேற்கு மாம்பழம் திரும்பினோம். அடுத்து ``மடுவின் மனதில் இமயம்`` நூல் வேலையை ஆரம்பிப்பதற்காக.

# மடுவின் மனத்தில் இமயம் தமிழகத்தில் நூல் வெளியீடு

கடந்த 23.04.2016ஆம் நாள் கனேடிய தமிழ் மகளிர் மாமன்றத்தின் பொறுப்பாளர் திருமதி. சரஸ்வதி அரிகிருஷ்ணன் அவர்கள் நடிப்புலகச் சக்கரவர்த்தி செவாலியர் டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களைப் பற்றி எழுதிய ஆய்வு நூல் வெளியீடு கண்டது.

ஜீ. உமாபதி கலையரங்கத்தில் திரு. கருணாகரன் உமாபதி தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. முன்னாள் மேயர் ச. கணேசன், செவாலியர் வி.ஜி.பி. சந்தோசம், ஆகாஜவாணி சென்னை இயக்குனர் திரு. முருகன் (சேயோன்), திரு. ஒர்வாடி ராதா கிருஷ்ணன், முனைவர் ஔவை நடராசன், பெருங்கவிக்கோ வ.மு. சேதுராமன், புதிய பறவை பிரபு, திருமதி பார்வதி பாலசுப்பிர மணியம், திருமதி விஜயலட்சுமி ஆகியோர் கலந்து சொற்பொழிவாற்றி பெருமை சேர்த்தனர். முனைவர் வாசுகி கண்ணப்பன் அவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடி பரவசப்படுத்தினார்.

நர்த்தன வித்தகி பார்வதி அவர்களின் மாணவிகள் சிவாஜி படப்பாடல்களுக்கு நடனமாடி மகிழ்வூட்டினர். நிகழ்ச்சி நடத்துனராக முனைவர் கஸ்தூரிராஜா செவ்வனே செய்து பெருமையூட்டினார். பதிப்பாளர் திரு. அருணகிரி, அவரது மனைவி திருமதி. விஜயகுமாரி, அன்னாரின் தமக்கையார் திருமதி. பிச்சையம்மா ஆறுமுகன், மகன்மார் கார்த்திக், சூடாமணி என குடும்பமே நூல் வெளியீடு சிறப்புற நடைபெற பேருதவியாக இருந்தனர்.

மண்டபம், ஒலிபெருக்கி, புகைப்படங்கள் யாவற்றையுமே பொறுப்பேற்ற திரு. கருணாகரன் அவர்கள் ரூபாய் 3000 கொடுத்து "மடுவின் மனத்தில் இமயம்" நூலை சந்தோசம் அண்ணாச்சியிடமிருந்து பெற்றுக் கொண்டார். நிகழ்வின் இடையில் ஔவை நடராசன் அவர்கள் 80 வயது பிறந்தநாள் வாழ்த்துக் கேடயமும், பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கப்பட்டார். நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு நூல் பெற்றுக் கொண்டதுடன் முனைவர் வாழ்த்துக்களை வழங்கிய பெருமக்களுக்கும், சிவாஜி ரசிக மன்றத்தவர்க்கும் பெருந்தகை குறித்து நேர்காணல் தந்து கருத்துக்கள் வழங்கிய டாக்டர் இராதா கிருஷ்ணன், திருமிகு. எஸ்.பி. முத்துராமன் ஐயா அவர்களுக்கும், திருமதி. சரோஜாதேவி, திருமதி. விஜயகுமாரி, குமாரிசச்சு, திரு. பிரபு அவர்களுக்கும் என்றென்றும் நன்றி கூற எழுத்தாளர் சரஸ்வதி அரிகிருஷ்ணன் அவர்களும், கனேடிய தமிழ் மகளிர் மாமன்ற அங்கத்தினர்களும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளார்கள்.

நன்றி! நன்றி! நன்றி!

## கண்ணீர் அஞ்சலி - சீதாலட்சுமி கந்தையா



அன்புக்கு அடையாளமே
ஏன் மறைந்தாய்?
பண்புக்கு உதாரணமே
எங்கு சென்றாய்?
உண்மைக்கு வழியானாயே
போனதெங்கே?
தன்மையாய் நடந்து
வழி சொன்னாயே!
தவிப்பது நான் மட்டுமா?
அறிந்தோர் அனைவரும் தாம்.
பாவி நமனுக்கோர்
நாள் வரும் காத்திருப்போம்!

# வணிகத்துறையில் பெண்கள்

## திருமதி. பாக்கியலட்சுமி பத்மநாதன்



ராணி என்றழைக்கப்படும் திருமதி. பாக்கியலட்சுமி பத்மநாதன் அவர்கள் தமிழீழத்தில் மானிப்பாய் என்ற ஊரில் பிறந்தார். நான்கு அண்ணன்மார்களையும், ஒரு தங்கையையும் உடன் பிறப்பாகக் கொண்டவர்.

பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயின்றவர். இளமையிலேயே தையல் வேலையில் மிகவும் நாட்டம் கொண்டவர். சிறப்பாக தையல் வேலை பயின்றவர். 'எஸ்.பி. எலக்ரோனிக்ஸ்' என்ற நிறுவன உரிமையாளரை 1991ஆம் ஆண்டு திருமணம் செய்தால். இத்தம்பதிகளுக்கு இரண்டு ஆண்பிள்ளைகள் உள்ளனர். தற்போது அவர்கள் பல்கலைக்கழகத்தில் பயின்று வருகிறார்கள்.

திருமதி. பாக்கியலட்சுமி 1995ஆம் ஆண்டு தையல் தொழிலை மேற்கொண்டார். கடந்த இருபதாண்டு காலமாக சிறப்பாகத் தையல் தொழிலை நடத்தி வருகிறார். சிறப்பாக சோளிகள், பாவாடை, நவீன உடைகள் தைத்துக் கொடுத்து பெயர் பெற்றுள்ளார். இனிமையாகப் பாடும் திறமையும் கொண்டவர் பாக்கியலட்சுமி.

வணிகத்துறையில் பெண்கள் என்ற வரிசையில் சிறப்பளித்து இவரைக் கௌரவிப்பதில் கனேடிய தமிழ் மகளிர் மன்றம் பெருமை கொள்கின்றது.

## திருமதி. முருகுப்பிள்ளை



வயது போனால் என்ன, சுறுசுறுப்பாக ஒரு துணிக் கடைக்கு மேற்பார்வையாளராக இருக்கும் திருமதி. முருகுப்பிள்ளை அவர்கள் முதிய மனங்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்கிறார்.

தன் மருமகனின் துணிக்கடையை கவனித்துக் கொள்வதோடு, ஆலயங்களுக்கும், முதியோர் இல்லங்களுக்கும் அன்னதானம் செய்து தொண்டாற்றுவதில் மகிழ்வடைகிறார். திருமதி. முருகுப்பிள்ளை அம்மாவை வாழ்நாள் சாதனையாளராக அறிவித்து சிறப்பிப்பதில் கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் மிகவும் பெருமை கொள்கிறது.

# வாழ்நாள் சாதனையாளர்

## திரு. திருமதி. நகுலசிகாமணி, உமா



திரு. நகுலசிகாமணி 1992இல் கனடாவிற் கால்பதித்தார். வரலாற்றுச் சுவடிகளைத் தேடும் முயற்சிகள் கனடாவில் தொடர்ந்தன.

இவரது மனைவி உமா. உமாவும் கணவன் தேடிப் பெற்றவற்றை ஆவணப்படுத்துவதில் வல்லமை காட்டி வருகிறார்.

இதுவரை இவர்களால் தொகுக்கப்பட்டும் மீள்பதிப்புச் செய்யப்பட்டும் வெளிவந்த நூல்கள் பின்வருமாறு:

சேர் பொன் அருணாசலம் (வாழ்க்கை வரலாறு)
நீச்சல் வீரன் நவரத்தினசாமி லியோன் பிள்ளை (1954)
தொண்டமானாறு செல்வச்சந்நிதியும் வரலாறும் - செ. நாகலிங்கம் (1974)
சிவராத்திரி புராணம் வைத்திலிங்கம் பிள்ளை உரை (1881)
S.J.V. செல்வநாயகம் A Tribute (1978) RE: Opening of North Ceylon Port (1951)
கந்தபுராணத்தில் வள்ளியம்மை திருமணப் படலம் (வல்வை வைத்திலிங்கம்)
மாரியம்மன் மான்மியம் (1972)
உடுப்பிட்டி சிவசம்பு புலவர் வரலாறும் ஆக்கங்களும் - வல்வை ந. நகுலசிகாமணி (2010)
கல்வளையந்தாதி மூலமும் உரையும் - நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் 2012

★★★★★

## திரு நற்குணசேகரன் அப்பையா



இவர் 1933.05.10இல் மலேசியாவில் பிறந்தார். தற்போது சுதுமலை வடக்கு, மானிப்பாயில் வசித்து வருகின்றார். நாடகம், சினிமா போன்ற துறைகளில் தனது கலைச்சேவையை 1949இல் இருந்து ஆற்ற ஆரம்பித்தார்.

பாவிகள் யார், ராஜகுரு, பிரண்ட்ராம், பொம்மைகள், சிதறிய சிலம்புகள், காசியும் தவசியும், சோக்கிறட்டீஸ், போர்த்துக்கேய தளபதி, நல்ல தந்த வல்லவன், மனிதன், யாருக்காக அழுதான், சிவகாமியின் சபதங்கள், சிதைந்த உள்ளங்கள் போன்ற நாடகங்களை சுதுமலை, இளவாலை, திருநெல்வேலி, நவாலி, கொழும்பு, வவனியா, அனராதபுரம், கிளிநொச்சி, அராலி போன்ற இடங்களில் மேடையேற்றினார். அவற்றின் மூலம் சமுதாயத்தில் பணத்திற்குள்ள மரியாதை, ஒற்றுமை, வேற்றுமை, தியாகத்தின் பெருமை, பொறாமை, நிலையான பழைய நினைவுகளின் இனிமை, தற்புகழ்ச்சி, கடவுள் பக்தி, நாஸ்திகன் என்பவற்றை விளக்க பாத்திரங்கள் அமைத்து நாடகம் பார்ப்பவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு இவை கைவிளக்காக அமைய வேண்டும் என எண்ணினார்.

இவரது பங்களிப்பை பாராட்டி "இயக்குநர் மாமணி", "நாடக சிகாமணி", "கலைஞாயிறு" போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். இவரை கனேடிய மகளிர் தமிழ் மாமன்றமும் வாழ்த்தி நிற்கின்றது.

# வாழ்நாள் சாதனையாளர்

## திருமதி. மேரி மனோகரன்



யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தையின் அரச பணி காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கல்வி பயின்றவர். பின் ஆசிரியப்பணி தொடர்பாகப் பலதரப்பட்ட சமூகத்தவருடனும், பல்வேறு பகுதிகளிலும் தனிமையாகக் கடமையாற்றிய காரணத்தால்- சமூக சேவை அவரது வாழ்வில் ஒரு அங்கமாக மாறி விட்டது எனலாம். இவர் 26 வருட ஆசிரியப்பணியில் போராட்ட காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் கடமையாற்றிய காலம் தன்னால் மறக்க முடியாததொன்று என்கிறார்.

தனது வாழ்க்கையில் குறுக்கிட்ட தடைக்கற்களையெல்லாம் படிக் கற்களாக மாற்றி பல சோதனைகளைத் தாண்டி தனது ஒரே மகனை ஒரு பொறியியலாளராக்கியுள்ளார். அவருடைய அனுசரணையால் 10 வருடங்களுக்கு முன்பு கனடாவுக்கு வந்தார். வந்த காலத்திலிருந்து பல தரப்பட்ட சமூக ஸ்தாபனங்களிலும் (Y.M.C.A, Seven Oak Long Term Care) இணைந்து தன்னார்வத் தொண்டராகப் பணியாற்றி வருகின்றார். TESOC-மூத்தோர் மேம்பாட்டுக் கழகத்தில் உபதலைவராகவும், ஒன்ராறியோ-இலங்கை ஓய்வூதியச் சங்கத்தில் நிர்வாக சபை உறுப்பினராகவும் கடமையாற்றி அந்த வகையிலும் சேவை செய்கின்றார்.

"முதுமை என்பது முடங்கிக் கிடக்கவல்ல" என்பதற்கிணங்க பல்வேறு கலை கலாச்சார மேடை நிகழ்வுகளில் (நடனம், நாடகம், வில்லுப்பாட்டு எனப்பலவற்றில் மூத்தோர் மேம்பாட்டுக் கழகத்தினூடாகப் பங்கு பற்றி வருகிறார். பல தரப்பட்ட போட்டி நிகழ்வுகளிலும் பங்கு பற்றிப் பரிசுகளும் பெற்றிருக்கின்றார். அண்மையில் "தூறல்" சஞ்சிகை நடத்திய 55 வயதுக்கு மேற் பட்டோருக்கான கட்டுரைப்போட்டியில் முதற் பரிசு பெற்றுள்ளார்.

ஒரு மூத்தோர் என்ற வகையில், தன் உடனொத்தோருக்கு தன்னால் இயன்றளவு சேவை செய்வதில் தான் பெரும் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார். இவரை வாழ்நாள் சாதனையாளர் என்று கனேடிய தமிழ் மகளிர் மன்றம் சிறப்பிக்கின்றது.

★★★★★



# கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் படைக்கும்

முதல் அங்கம்

மாலை 3:00: தேசியகீதம், தமிழ் வாழ்த்து, மன்ற கீதம்: மன்ற உறுப்பினர்கள்
ஒரு நிமிட அஞ்சலி
வரவேற்பு நடனம்:
அறிவிப்பாளர்: திருமதி லீலா சிவானந்தன்
வரவேற்புரை: திருமதி. சரஸ்வதி அரிகிருஷ்ணன் (ஏற்பாட்டாளர்)
பாடல்: செல்வி. சரிகா நவநாதன்
நடனம்: செல்வி. பத்மஜா ரகுநாதன் மாணவிகள்
திறப்பு விழா சிறப்புரை : மாண்புமிகு ஜோன் மெக்கே **MPP**
(நாடாளுமன்றச் செயலாளர்)
சிறப்புக் கௌரவமளித்தல் : பொன்விழா தம்பதிகள், வாழ்நாள் சாதனையாளர்கள், வணிகத்துறையில் பெண்கள்
அறிவிப்பாளர்: செல்வி. சயந்தா பாஸ்கரன்
சிறப்புச் சொற்பொழிவு: மாண்புமிகு மிச்சி ஹண்டர் **MPP**
நற்சான்றிதழ் வழங்குதல்
அறிவிப்பாளர்: திருமதி. நந்தினி பிலிப்ஸ்
பாடல்: திரு ஏன்றன் பிலிக்ஸ்
நடனம்: திருமதி. ஜனனி லோகன் மாணவிகள்
நாடகம்: கம்பனின் முனிவு - தயாரிப்பு சரஸ்வதி அரிகிருஷ்ணன்
சிறப்புச்சிற்றுரை: திரு. நிர்மலன் வடிவேலு
பாடல்: செல்வி சரிகா நவநாதன்
நாடகம்: கம்பனின் முனிவு தொடர்ச்சி....
பாடல்: திரு. கொக்குவில் சிங்கம்

இரண்டாம் அங்கம் - “மடுவின் மனத்தில் இமயம்” நூல் வெளியீடு

அறிவிப்பாளர்: திருமதி லீலா சிவானந்தன்
வெளியிடுபவர்: மாண்புமிகு ஹரி ஆனந்தசங்கரி **MP**
நூலாய்வு: செல்வி. டாக்டர் மேல் குய்ரி போல்
சொற்பொழிவு: திருமிகு. கருணாகரன் ஜி. உமாபதி
ஆசி உரை: தமிழவேள். வி. கந்தவனம்
வாழ்த்துரை: திருமிகு லோகேந்திரலிங்கம் (ஆசிரியர் - உதயன் பத்திரிகை)
வாழ்த்துரை: அறிஞர் சாமி அப்பாத்துரை
அறிவிப்பாளர்: திருமதி. நந்தினி பிலிப்ஸ்
நூல் வெளியீடு முதல் பத்து நூல்களைப் பெறுபவர்கள்
பாடல்: திரு. ராஜ் மோகன்
நடனம்: செல்வி பவித்ரா தவராஜா
பாடல்: திருமதி. கதிர்காமத்தம்பி
நடனம்: திருமதி. ரஞ்சினியின் மாணவிகள்
நன்றிஉரை: திருமதி. அற்புதம் காங்கேசன்
பாடல்: திரு. ருக்மணி காந்தன்
பாடல்: திரு. கருணாகரன்

# NINTH YEAR OF TOWARDS THE LIGHT

Part one

3:00 PM National Anthem, Tamil Thai Valthu, Association Song
CTW Association Members - One Minute Silent
Welcome Dance
Announcer: Mrs. Leela Sivananthan
Welcome Speech - Mrs Saraswathy Arikrishnan - Organizer
Song: Miss Sariga Navanathan
Dance: Miss Pathmaja Ragunathan's Students
Declaration Speech & Prizegiving by the honourable John Mckay MPP
to honour the Golden Jubblie Couple & Life-time Achievement Award
Announcer: Mrs. Nanthini Philips
Special Speech by Honourable Mitzie Hunter, Scarborough Guildwood MPP
Certificates Presentation
Song: Mr Entran Pilips
Dance: Mrs Janani Logan's Students
Drama: "Kampanin Munivu" Directed by Saraswathy Arikrishnan
Song: Miss Sariga Navanathan
Drama Continuation
Song: Mr. Kokkuvil Singam

Part Two Book Release - "Maduvin Manaththil Imayam"

Announcer: Mrs. Leela Sivananthan
Book Release by: Honourable Hari Anandasankari MP
Noolayvu: Miss Dr. Mary Qury Paul
Speech: Mr. Karunakaran G. Umapathy
Speech: Thamilavel v. Kandavanam
Speech: Mr. Logenthiralingam - Editor - Uthayan News Paper
Speech: Arinjar Sami Appathurai
Announcer: Mrs. Nanthini Philips
Song: Mr. Raj Mohan
Dance: Miss Pavithira Thavarajah
Song: Mrs. Kathirkamathamby
Dance: Mrs Ranjini's Students
Vote of Thanks: Mrs. Atputham Kangesan
Song: Mr. Rukmanikanthan
Song: Mr. Karunakaran

# பொன்விழாக் கண்ட தம்பதிகள்

## திரு. திருமதி. செபஸ்தியான்பிள்ளை மரியநாயகி



திரு. செபஸ்தியான்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் இளவாளை என்னும் ஊரில் 1933ஆம் ஆண்டு பிறந்தார். இவரது துணைவியார் மரியநாயகி 1937ஆம் ஆண்டு தமிழீழத்தில் பிறந்தவர்.

இத்தம்பதிகள் இருவரும் கல்வி, வேள்விகளில் சிறந்து விளங்கினர். திருமதி. மரியநாயகி 30 ஆண்டுக்காலம் ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறார்.

திரு. செப்ஸ்தியான்பிள்ளை அவர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்து பல சேவைகளைப் புரிந்து வந்திருக்கிறார். சிறந்த எழுத்தாளராக விளங்கும் இவர் பல புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார். இவரது எழுத்தில் வெளி வந்த நாடகம் முதல்பரிசு பெற்றதாகத் தெரிவித்தார். பாடல்கள் எழுதி மெட்டமைத்துப் பாடுவதிலும் வல்லவர் என்று அறிகிறோம். இவர் ஆரம்பித்த பலநோக்குக் கூட்டுறவுக் கழகம் 26 கிளைகளாகச் செயல்பட்டு வருகிறது.

கணவரும், மனைவியுமாக பல தொண்டுகளைப் புரிந்து வருகிறார்கள். இவர்களை பொன்விழாக் கண்ட தம்பதிகள் என்று கௌரவமளித்து சிறப்புச் செய்வதில் மன்றம் பெரு மகழ்வடைகிறது.

★★★★★

## திரு. திருமதி சிவகுமார் புஸ்பமலர்

திரு. சிவகுமார் அவர்கள் ஸ்ரீலங்காவில் பிறந்தார். தனது கல்வியை முடித்த பின்னர் புறூக் தேயிலை தொழிற்காலையில் பத்து ஆண்டுகள் பணி புரிந்தார்.



பின்னர் சொந்தமாக தொழில் புரிய ஆரம்பித்தார். நாட்டின் நிலை கருதி 1996ஆம் ஆண்டு கனடாவிற்கு வந்தார். புஸ்பமலர் எனும் பெண்ணை இவர் 1956ஆம் ஆண்டு திருமணம் புரிந்தார். இந்தத் தம்பதிகளுக்கு இரண்டு ஆண் மக்களும், ஐந்து பெண் குழந்தைகளும், பதினைந்து பேரக் குழந்தைகளும் இருக்கிறார்கள்.

திருமதி. புஸ்பமலர் குடும்பத் தலைவியாக இருந்து இயன்ற வரை மகிழ்வுடன் இல்லறம் பேணி வருகிறார்.

இத்தம்பதிகளை பெருமைப்படுத்துவதில் கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் பெருமை கொள்கின்றது.

★★★★★

# பொன்விழாக் கண்ட தம்பதிகள்

## திரு. திருமதி காராளசிங்கம் இராஜேஸ்வரி தம்பதியர்



திரு. சின்னத்துரை காராளசிங்கம் அவர்கள் 1933.11.24 ஆம் திகதி யாழ். வண்ணார்பண்ணை, நீராவியடியில் பிரசித்தி பெற்ற வழக்கிறஞர் திரு. இராமலிங்கம் சின்னத்துரை அவர்களுக்கு மூத்த மகனாகப் பிறந்தார். யாழ். இந்துக்கல்லூரியில் கல்வி பயின்று முடித்து விட்டு 1956ஆம் ஆண்டு கொழும்பில் அரசாங்க லிகிதர் சேவையில் சேர்ந்து, பின்னர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சேவை புரிந்தார்.

1966.04.24ஆம் திகதி திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சீனியர் பொன்னுத்துரையின் சிரேஷ்ட புத்திரியாகிய இராஜேஸ்வரியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள். கடைசியாகக் கொழும்பில் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்திலிருந்து 1991.01.01ஆம் தகதி சேவையிலிருந்து இளைப்பாறினார். இளைப்பாறிய பின்னரும் காணாமல் போன ஆக்களைப் பதிவு செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சேர்ந்து பணியாற்றினார்.

2000ஆம் ஆண்டு ஜனவரியில் கனடாவுக்கு குடும்பத்துடன் இடம் பெயர்ந்தார். இவருடைய பேரப்பிள்ளைகள் மூவர் பல்கலைக்கழகத்தில் படிக்கிறார்கள். முதியோர் தமிழ்ச்சங்கம், போக் பிராந்திய முதியோர் சங்கம், ஸ்காபறோ முதியோர் சங்கங்களில் அங்கத்தவராகச் சேர்ந்து சங்கத்துக்காக உழைத்து வருகிறார்.

பொன்விழாக்காணும் இத்தம்பதியினரை வாழ்த்துவதுடன் 80வது வயதைப் பூர்த்தி செய்த திரு. காராளசிங்கம் அவர்களையும் கௌரவித்து வாழ்த்துவதிலும் கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் பெரு மகிழ்ச்சி அடைகிறது.

★★★★★

## திரு. திருமதி சண்முகநாதன் ராசம்மா தம்பதியர்



திரு. சண்முகநாதன் அவர்கள் முல்லைத்தீவு, நல்லூர், யார்ப்பாணத்தை பிறப்பிடாகவும், வசிப்பிடாகவும் கொண்டவர். 1983 முதல் தமிழரசுக் கட்சியில் முக்கிய பிரமுகராக விளங்கியவர். சமயத் தொண்டையும், பொதுப்பணியையும் மேற்கொண்டு சிறப்பாகச் சேவையாற்றியவர். 1961ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27ஆம் நாள் ராசம்மாவை மணம் புரிந்தார். ராசம்மா அம்மையார் இளநிலைப் பட்டதாரி ஆசிரியையாக பணிபுரிந்தார். இத் தம்பதிகளுக்கு இரண்டு ஆண்மக்களும், இரண்டு பெண் பிள்ளைகளும் உண்டு. 2008ஆம் ஆண்டு இவர்கள் குடும்பத்துடன் கனடாவிற்கு குடியேறினார்கள். கனடா நாட்டின் ஆதரவும், அரவணைப்பும் இவர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இதனால் மனமகிழ்வோடு பல பொதுப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வருகிறார்கள் இப்பொன்விழா தம்பதிகள்.

★★★★★

# ஒரு பெண்ணினால் தனித்து நின்று எதையும் சாதிக்க முடியும்.



ஒரு சிற்றூரில் பிறந்து வளர்ந்து வந்த இரு சிறுவர்களின் கதையே இது. இருவரும் ஊர்ப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தனர். சிறு வயதில் சிறுவன், சிறுமிக்கு பாட்டுச் சொல்லிக் கொடுப்பது ஓர் வழக்கமாக இருந்தது. சிறுவன். சொல்லிக் கொடுக்க பாட்டைப் பாடி பரிசும் பெற்றிருக்கிறாள் அச் சிறுமி. பின், இளவாலை சென் கென்றீஸ் கல்லூரியில் சிறுவனும், சிறுமி இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்திலும் படிப்பைத் தொடர்ந்தனர். படிப்பு, முடிந்ததும், பையன் கொழும்புக்கு வேலை தேடிச் சென்றான். பெண் தாய் தந்தையருடன் தங்கி இருந்தாள். பையனுக்கு வேலையும் கிடைத்து விட்டது. பின் பெண்ணின் இரு சகோதரிகளின் திருமணம். இதே நேரத்தில் தான் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்வதற்கு அவவின் பெற்றோரிடம் அனுமதி பெற்று அடுத்த ஆண்டில் திருமணமும் நடந்தது. பதினைந்து வருட வாழ்க்கை. பதினைந்து வருடத்தில் நான்கு பிள்ளைகள். அத்தருணம் இன்னொருத்தியை மணந்தான். முதல் மனைவி மனமுடைந்து வீட்டை விட்டுச் சென்று விட்டாள். பிள்ளைகளை நினைந்து நினைந்து தாங்கொணாத் துயரமடைந்தாள்.

இப்படி இருக்கும் தருணத்தில் அவர் படித்த திருக்குடும்பக் கன்னியர் மடத்திலிருந்து அநுராதபுரம் கன்னியர் மடத்துக்கு ஆசிரியராகக் கடமையாற்றும்படி உத்தரவு வந்தது. அங்கு சென்று இரண்டு வருடங்கள் கடமையாற்றினார். கடமையாற்றிக் கொண்டிருக்கும் தருணத்தில், அங்கு கலவரம் ஏற்பட்டதனால், வீடு திரும்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டது. உலகமே தெரியாமல் இருந்த போது திருக்குடும்பக் கன்னியர்களின் அறிவுரைகளைப் படிக்க ஆர்வம், துணிவு எல்லாமே கிடைத்தது.

வீட்டில் தங்கியிருக்கும் போது இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தலைவி, அவளது வீட்டுக்குச் சென்று, அவரை இளவாலை கன்னியர் மடத்தில் ஆசிரியர் பதவி ஏற்கும்படி வற்புறுத்தினார். அவரின் வற்புறுத்தலுக்கிணங்க, அவளும் ஆசிரியர் பதவி ஏற்று எல்லோரும் மெச்சத்தக்க வண்ணம் தனது கடமையைச் செய்தாள்.

அவள் அங்கிருக்கும் பொழுது கத்தோலிக்கப் போதகர் ஒருவர் அங்கு வந்தார். அவர் இத்தாலியின் றோம் நகரைச் சேர்ந்தவர். அவர் அவளிடம் றோம் நகரில் போய் வேலை பார்ப்பதற்கு விரும்பமிருந்தால், சொல்லும்படி கேட்டார். அதற்கு அவளும் சம்மதம் கூறி, இத்தாலிக்குச் சென்றாள். அங்கு ஒரு டாக்டரிடம் பணி புரிந்தார். பின் ஒரு சட்டத்தரணியிடம் பணியாற்றினார்.

அங்கிருக்கும் பொழுது தன் மூத்த மகனை சட்டத்தரணியின் உதவியுடன் றோம் நகருக்கு அழைத்தாள். அங்கு மூன்று மாதங்கள் தங்கிப் பின் கனடா நாட்டை வந்தடைந்தான அவளது மகன். நல்ல வேலையும் கிடைத்து, தன் தாயாரையும் தம்பியையும் ஸ்பொன்சர் செய்தான்.

பின் கனடிய அரசாங்கத்தினால், அனுமதி கிடைக்கப் பெற்று, மூன்று பிள்ளைகளுடனும் கனடா வந்து சேர்ந்தார்கள். மூத்த மகனின் உதவியுடன் மற்றவர்களும் வேலை செய்யத் தொடங்கினார்கள். பின் பிள்ளைகளும் மணம் முடித்து, தங்கள் குடும்பத்துடன், சந்தோஷமாக இருக்கிறார்கள். பேரப்பிள்ளைகளின் சந்தோஷத்துடன் அம்மா இருக்கிறார்.

இக் கதையை எழுதுவதன் நோக்கமென்ன என்றால், ஒரு பெண்ணினால் தனித்து நின்று எதையும் சாதிக்க முடியுமென்பதுதான்.

**திருமதி. ஜெரால் டி இன்னாசித்தம்பி**

# கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் - ஒளியை நோக்கி 2016

## எட்டாவது ஆண்டு வரவு விபரம்

| | | |
|---|---|---|
| ஒப்ரிமாட் | - | 250.00 |
| டாக்டர் போல். ஜோசெப் | - | 100.00 |
| ரூபி & ரூபி | - | 150.00 |
| ஜே.சி.எஸ். | - | 100.00 |
| சாமி ரூ சண்ஸ் | - | 100.00 |
| டாக்டர். விஜயகலா | - | 100.00 |
| எம்பசி உணவம் | - | 150.00 |
| திரு. சிவனு | - | 100.00 |
| திருமதி. மார்கிரேட் | - | 50.00 |
| டாக்டர் போல் ஜோசெப் காப்புறுதி | - | 108.00 |
| விளம்பரம் | - | 100.00 |
| எம்பசி குரோசரி - இனிப்பு | - | 50.00 |

## எட்டாவது ஆண்டு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுமலர் | - | 650.00 |
| பனர் | - | 200.00 |
| மண்டபம் | - | 650.00 |
| பக்ஸ் | - | 10.00 |
| இதர செலவு | - | 90.00 |

எம்பசி உணவகம் 500 சமோசாக்கள் $50.00 பக்கோடா

எம்பசி குரோசரி - இனிப்புவகை

திருமதி ஜெயராணி - தண்ணீர் போத்தல்கள், பேப்பர் ரவல்

மனோ தவராஜா - குளிர்பானம் 2 பக்கற்றுகள்

சீதா கந்தையா - குளிர்பானம் 3 பக்கற்றுகள்

# மன்ற ஏற்பாட்டாளர்

கனேடியத் தமிழ் மகளிர் மாமன்றத்தை நிறுவியவர் திரு. சரஸ்வதி அரிகிருஷ்ணன் அவர்கள். 2008ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 23ஆம் நாள் சில அன்பு உள்ளங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதே நாள் 6.7.2008ஆம் ஆண்டு ஒரே நாள் நிகழ்வாக பெருஞ் செலவில் நடத்தப்பட்டது.

2.10.2008ஆம் நாள் திடீரென்று ஏற்பட்ட இருதய நோயால் திரு. சரஸ்வதி அரிகிருஷ்ணன் காலமானார். அதன் பின்னர் சோர்ந்து விடாமல் கடந்த எட்டு ஆண்டுகளாக திருமதி. சரஸ்வதி அரிகிருஷ்ணன் பல புதிய புதிய நிகழ்வுகளுடன் நடத்தி வருகிறார்.

பொன் விழா கண்ட தம்பதிகள், வாழ்நாள் சாதனையாளர்கள், வணிகத்துறையில் பெண்கள், சமூக சேவையாளர்கள் என்று பலரைப் பாராட்டிக் கேடயமும், நற்சான்றிதழ்களும் வழங்கி வருகின்றார். அத்துடன் பரதம், பாடல்கள், குறுநாடகம் என்று மேடையேற்றி வருகின்றார்.

பிறப்பால் மலேசியாவைச் சேர்ந்தவர் திருமதி. சரஸ்வதி அரிகிருஷ்ணன். இவர் தமிழ் ஆசிரியராகப் பயிற்சி பெற்றார். அத்துடன் தாதிமார் பயிற்சி பெற்று தனது 60 வயதுவரை பிரத்தியேக தாதியாகப் பணிபுரிந்தார்.

தனது பன்னிரெண்டாவது வயது முதல் சிறுகதைகள், கட்டுரைகள் எழுத ஆரம்பித்திருந்தார். இன்று வரை எழுதிக் கொண்டே இருக்கிறார்.

இன்று இங்கு இவரால் எழுதப் பெற்ற "மடுவின் மனதில் இமயம்" என்னும் நூல் வெளியீடு காண்கிறது. இவரது கணவரும் சிறந்த நாவலாசிரியர். 35 நாவல்களை எழுதி இருக்கிறார். தம்பதிகள் இருவரும் எழுத்துத் துறையில் எதையும் விட்டு வைக்கவில்லை.

சிறுவர் நாடகம், கதை, நாவல், மற்றும் திறனாய்வுக் கட்டுரைகள், சமூக, துப்பறியும் நாவல்கள், கவிதை, சிறுகதைகள், தொடர்கதைகள், வானொலி நாடகங்கள் என்று பல கோணங்களிலும் தங்கள் ஆற்றலைப் படைத்துள்ளார்கள். அதற்காகத் தங்கப் பதக்கங்களும், பாராட்டுக்களும், பண முடிப்பும், தமிழக எழுத்தாளர் சங்க இலக்கிய மாமணிகள் பட்டமும், நடுவர் இதய நெடுஞ்செழியன் அவர்கள் வழங்கிய "எழுத்து செம்மல்கள்" என்ற விருதும் போற்றத்தக்கது. அத்துடன் "நானும் ஒரு தமிழ்ப் பெண்தான்" என்ற நாவல் வெளியீட்டுக்கு மதிப்புரை வழங்கிய நாவலர் "கலைமாமணிகள்" என்று எழுதி கையொப்பம் இட்ட நூலைப் பத்திரமாக வைத்திருக்கிறார் சரஸ்வதி அம்மா.

மலேசியாவில் அரசியலில் நன்கு சேவை புரிந்துள்ளார் (MIC) மலேசியன் இந்தியன் காங்கிரசில் தேசிய அளவில் மகளிர் செயலாளராகவும், சிலாங்கூர் மாநிலத்தில் நிர்வாக உறுப்பினராகவும், கிளை ரீதியில் பெட்டாலிங் கனகபுர கார்டன் பகுதியில் 1972 முதல் 2002ஆம் ஆண்டு வரை மகளிர் பகுதித் தலைவியாகவும் சேவையாற்றி உள்ளார். இவரது சேவையை மதித்து P.J.K என்ற நாட்டுக்கு விசுவாசமானவர் என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார்.

எழுத்தாளர் சங்கத்திலும், நிர்வாக உறுப்பினராக இருந்து சேவை புரிந்துள்ளார். இந்து சங்கப் பேரவையில் ஒன்பது ஆண்டுகள் பெட்டாலிங் பேரவைச் செயலாளராக இருந்து அரும்பணிகள் ஆற்றியுள்ளார்.

வன்முறை வேண்டாம், தாய்மையின் மறுபக்கம், சமூகமேம்பாட்டிற்கு எழுத்தாளர்களின் பங்கு, நாளைய இளையோர் போன்ற கருத்தரங்குகளைத் தனது கணவரோடு சேர்ந்து நடாத்தி பெரும் பேர் பெற்றார்.

கனடாவிலும், தமிழ் நாட்டிலும், தனது சேவையை, தமிழ் பணியை செய்து வரும் சரஸ்வதி அம்மா அவர்கள் தனது 74ஆவது அகவையில் இது போன்ற இதர நிகழ்வினை நடத்துவது இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

***கனேடிய தமிழ் மகளிர் மாமன்ற உறுப்பினர்கள்***

# ஒளியை நோக்கி - கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் விருதளிப்பு - கலைவிழா ஏற்பாட்டுக் குழுவினர் 2016

திருமதி சரஸ்வதி அரிகிருஷ்ணன் பி.ஜே.கே
திருமதி ஜெயராணி பூபாலசிங்கம்
திருமதி மனோ தவராஜா
திருமதி சீத்தாலட்சுமி ராமநாதன்
திருமதி ஜெரால் டி இன்னாசித்தம்பி
திருமதி பேரின்பவள்ளி சண்முகம்
திருமதி வசந்தா ரோகினி தேவி கருப்பையா
திருமதி பரமேஸ்வரி பாலபரதகுமாரன்
திருமதி இந்திராணி பத்மநாதன்
திருமதி சீதாலட்சுமி
திருமதி. ராஜலட்சுமி பாலசுப்ரமணியம்
திருமதி. விக்ரோறியா அன்ரனி
திருமதி. தனரூபி ரவிச்சந்திரன்
திருமதி பாக்கியம் மார்க்கண்டு
திருமதி சரோ பாஸ்கரன்
திருமதி நாகேஸ்வரி ராஜரத்தினம்
திருமதி ஞானேஸ்வரி கதிர்காமத்தம்பி
திருமதி அருந்ததி கருணாகரன்
திருமதி செல்லம்மா ராஜதுரை
திருமதி மனோகரி சதாசிவம்
திருமதி புனிதம் நித்யானந்தம்
திருமதி அற்புதராணி காங்கேசன்
திருமதி. திலகவதி கனகசபாபதி
திருமதி. செல்வராணி செல்வராஜா
திருமதி. அன்பரசி செல்வராஜ்
திருமதி. சயனமாலா பத்மநாதன்

## ஆலோசகர்கள்

தமிழவேள் வி. கந்தவனம்

டாக்டர். போல் யோசேப்

## நன்றியுரை

பாசமிகு பார்வையாளர்களே, நேசமிக்க நடனமணிகளே, எங்கள் அழைப்பையேற்று நிகழ்வினைச் சிறப்பிக்க வந்துள்ள பெருமக்களே உங்கள் அனைவருக்கும் எங்கள் பணிவான வணக்கம்! முதலாம் ஆண்டு ஒருநாள் நிகழ்வாக நடைபெற்ற ஒளியை நோக்கி இன்று ஒன்பதாம் ஆண்டு விழாவினைக் கொண்டாடுகிறது.

"கனேடிய மகளிர் மாமன்றத்தை" தோற்றுவித்தவர் திருவாளர் சரஸ்வதி. அரிகிருஷ்ணன். அன்னாரின் இழப்பிற்குப் பின்னர் இந்த நிகழ்வு இனி நடைபெறாது என்று எண்ணி சொன்னவர்கள் பலர். ஆனால், இந்த நிகழ்வின் உள் நோக்கம் அறிந்த ஞானமுடையோரின் ஆதரவால் எட்டு ஆண்டுகளைக் கடந்து வந்து விட்டோம். ஆரம்ப காலம் முதல் எங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்துவரும் மகளிரின் பெயர்கள் உங்கள் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த காலங்களில் சில பொறுப்புக்களை ஏற்றுச் செலவுத் தொகை கொடுத்தவர்களின், கொடுக் காதவர்கள் பெயர்களையும் கொடுத்துள்ளோம். இதற்குக் காரணம் நேர்மை, நீதி கண்ணியம் தான்.

கனேடிய மகளிர் மாமன்றம் நடத்தும் "ஒளியை நோக்கி" விழா சிறப்புற நடக்க கைகொடுத்த தமிழ் ஒண் தொலைக்காட்சி, டி. வி. ஐ தொலைக்காட்சி, கீதவாணி East FM வானொலி, சி.எம். ஆர்., கதிரொளி வானொலி, வார மாத பத்திரிகைகள், விளம்பரதாரர்கள், கேடயம், நினைவுச் சின்னங்கள் அன்பளிப்புச் செய்தவர்களுக்கும், மிக முக்கியமாகப் பல வழிகளிலும் உதவி வழங்கிய டாக்டர் போல் யோசெப் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்த ஆண்டு மேலும் சிறப்பான நிகழ்வுகளோடு உங்களை சந்திக்கும் வரை நன்றி.

வணக்கம்!

# கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் எழுச்சிப் பாடல்

பாடல் ஆக்கம்: சரஸ்வதி அரிகிருஷ்ணன்

**பல்லவி**

ஒன்று கூடுவோம் நாங்கள் ஒன்று கூடுவோம்
ஒற்றுமையாய் கூடி நின்று சேவையாற்றுவோம்
(ஒன்று)

**சரணம்**

கனேடியத் தமிழ் மகளிர் மாமன்றமே செய்யும்
சேவைதனைக் காண வேண்டும் என்றுமே
அல்லல் போக்கி அரவணைக்கும் கனடா நாட்டிலே
துள்ளலாக சேர்ந்து செய்வோம் சேவையே.
(ஒன்று)

சாதி மத நிற பேதம் எமக்கில்லையே
வாதிட்டு வாழும் வாழ்க்கை எமக்கில்லையே
மோதி வரும் அலையைப் போல ஓயமாட்டோமே
நீதியோடும், நேர்மையோடும் சேவையாற்றுவோம்.
(ஒன்று)

## தமிழ்த்தாய் வணக்கம்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வான மளந்தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!
- புரட்சிக்கவி பாரதி

## Canadian National Anthem

O Canada!
Our home and native land!
True patriot love in all thy sons command.

With glowing hearts we see thee rise,
The True North strong and free!

From far and wide,
O Canada, we stand on guard for thee.

God Keep our land glorious and free!
O Canada, we stand on guard for thee.

O Canada, we stand on guard for thee.

# DENTAL OFFICE

## குடும்ப பல்வைத்தியர்



## DR. VIJAYAKALA SIVATHEVAN

**டாக்டர் விஜயகலா சிவதேவன்**

சகல விதமான பல் வைத்திய சேவைகளையும் பெற்றுக் கொள்வதுடன் அனைத்துவிதமான காப்புறுதிகளும் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகிறோம்.

**கனேடிய தமிழ் மகளிர் மாமன்றம் நடாத்தும் ஒளியை நோக்கி 2016 விழா சிறப்புற வாழ்த்துகிறோம்!**




A GENTLE AND CARING ENVIRONMENT

**Tel: 416-438-5536**
**Cel: 416-892-0987**

700 Markham Road, Unit 1
(Markham & Lawrence)
Scarborough, ON, M1H 2A7
1 Block North of Lawrence

TTR TORONTO TAMIL RADIO
கீதவாணி

**கனேடித் தமிழ் மகளிர் மாமன்றம் பெருமையுடன் நடத்தும் ஒன்பதாம் ஆண்டு விழா வெற்றி பெற வாழ்த்துகிறோம்!**

**திரு. நடா ஜெயராஜ், திரு. நடா ஆர். ராஜ்குமார்.**

- ★ கனேடிய தமிழ் ஒலிபரப்பில் முன்னோடிகள்
- ★ சர்வதேச தமிழ்வானொலிகளுடன் இணைவு
- ★ ஒலிபரப்புச் சாதனை விருதை 2000 ஆம் ஆண்டு பெற்ற நிறுவனம்

*சிறப்பலை வரிசை வானொலிப் பெட்டிகள் எப்பொழுதும் மலிவு விலையில்!*

**நாள் முழுவதும் இலங்கை, இந்திய, ஐரோப்பிய, மற்றும் கனேடிய செய்தியாளர்கள் வழங்கும் செய்திகளைக் கேட்கலாம்**

**720TAPSCOTT ROAD, SUITE 101,**
**SCARBOROUGH, ON, M1X 1C6 (FINCH & TAPSCOTT)**
**TEL: 416 - 267 - 1100 FAX: 416 - 267 - 7707**
**WWW.GEETHAVAANI.COM**

## நினைவில் நின்ற நிகழ்வுகள் சில.....




1994ஆம் ஆண்டு முதல் இன்று வரையும், (2016ஆம் ஆண்டு) இன்னும் பல ஆண்டுகளுக்கும் எங்களுக்கு உற்ற துணையாக இருந்து உதவி வரும் திரு. அருணகிரி விஜயகுமாரி தம்பதிகளும், அவர்களது மகன்மார்கள் கார்த்திக், சூடாமணி, ஆகியோர் உடன் சகோதரியாரும் பல்லாண்டு காலம் வாழ்க வளமுடன் என வாழ்த்தி நிற்கின்றோம்.

தமிழகத்தில் நடைபெற்ற 'மடுவின் மனத்தில் இமயம்' நூல் வெளியீட்டு விழாவில் ''மாதவி பொன் மயிலாள் தோகை விரித்தாள்'' என்னும் பாடலுக்கு தோகை விரித்து நடனமாடிய நாட்டியத் தாரகைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.






'மடுவின் மனத்தில் இமயம்' நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற உதவிய திரு. கருணாகரன், ஜி. உமாபதி முனைவர் ஔவை நடராசன், ஏர்வாடி ராதா கிருஷ்ணன், முனைவர் கஸ்தூரி ராஜாவுடன் நூலாசிரியர் திருமதி. சரஸ்வதி அரிகிருஷ்ணன்

EYE EXAM

# OPTIMART



Bright Optical

Meet the optician and receive your glasses within an hour

Eye Glasses, Contact Lenses We have excellent prices on colour contact lenses to change the colour of your eyes

416-266-3389
3150 Eglinton Ave
(Markham & Eglinton)
Scarborough, ON. M1J 2H2




416-690-4649
294 Main St. (At Danforth)
**Professional Building**
Toronto, ON. M4C 4X5




416-294-9903
3351 Markham Rd,
(Markham & Steeles)
Scarborough, ON.
M1X 0A6




கொஞ்சம் FASHION கொஞ்சம் CULTURE

# Ruby's CLOSET

30 New Delhi Dr. Unit# 67
Markham, ON. L3S 0B5

Bus: 647- 979 -1752 | Dir: 647- 878 -1752
rrubyscloset@hotmail.com



# RUBY AND RUBY

★Sarees ★Panjabes ★Fancy Items ★Ladies Fashions
★Men Fashions ★ Kids Wear ★New Born Items

TEL: 416-264-7833 | FAX:416-264-7834
Email: rubyandruby@live.ca
2843 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2S8

@rrubyscloset
@ Ruby-and-Ruby-Saree-Palace

## மனதில் நின்ற சில நினைவுகள்



ஏ.வி.எம். படப்பிடிப்பு அலுவலகம் புதுப்பிக்கப்பட்டு கம்பீரமாக இருக்கிறது. அங்கு தன்பணிகளை மேற்கொண்டு வரும் இயக்குனர் திலகம் எஸ்.பி. முத்துராமன் அவர்களை நேர்காணல் எடுக்கச் சென்ற போது எடுக்கப்பட்ட படம்.
மேலே படத்தில் காணப்படுபவர் ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் அவர்கள்






தமிழகத்தில் தொழிலதிபர்களில் ஒருவராக, சிறந்த எழுத்தாளராக, கொடைவள்ளலாகத் திகழும் திரு. சந்திரசேகர் அவர்களின் அறுபதாம் அகவை பூர்த்தி விழாவில் திரு. டில்லிகணேஸ், திரு. கிரேசி மோகன், திருமதி. கஸ்தூரி ராஜா பேராசிரியர் மேலும் பல இலக்கிய ஆர்வலர்கள் கலந்து சிறப்பித்த போது திருமதி. சரஸ்வதி அரிகிருஷ்ணன் அவர்களும் குத்து விள்கேற்றி, வாழ்த்துரையும் வழங்கினார்.

## ஒளியை நோக்கி 2015 நிகழ்வுகள் சில.....



# மடுவின் மனத்தில் இமயம் நூல் வெளியீட்டு விழா - தமிழகம் 2016














## தாமரைக்குளத்தில் முதியோர் இல்லத்தில்......






Fine Print 416-264-2-1557